2023 அக்டோபர் 10]

சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் மாண்பிற்கினிய அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதி மக்களுக்குப் பட்டா வழங்கும் நிகழ்ச்சியை செய்து கொடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் இதுகுறித்து என்னிடம் பேசியிருக்கிறார். இதுபோன்று பல சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய பகுதியிலே பட்டா வழங்க வேண்டுமென்று என் மத்தியிலே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் பரிசீலனை செய்து தகுந்த நடவடிக்கையை நிச்சயமாக நம்முடைய அரசாங்கம் எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 212, மாண்புமிகு உறுப்பினர் திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

212—

அடுக்குமாடிக் குடியிருப்புகள்

***51190—திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் தொகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராமநாதபுரம் தொகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலம் ஏதுமில்லை. எனவே, புதிதாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுகிற திட்டம் தற்போது இல்லை.

[2023 அக்டோபர் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள்.

திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதி என்பது அந்த மாவட்டத்தினுடைய தலைமையிடமாக இருப்பதனால், அரசு அலுவலகங்களில் பணிபுரியும் பல்லாயிரக்கணக்கான அரசு ஊழியர்களுக்கு வீட்டு வசதியை ஏற்பாடு செய்து தந்திட நமது துறையின் சார்பாக இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட 25-வது வார்டு மூலக்கொத்தளம் என்னும் இடத்தில் ஏற்கெனவே வீட்டு வசதி வாரியத்தின் கட்டடங்கள் இருக்கின்றன. 25 ஆண்டுகள் பழமையுற்றதால் அவை இடிக்கப்பட்டு, 25-வது வார்டில் தற்போது காலியிடமாக இருக்கின்றது. அந்த இடத்தைப் பரிசீலனை செய்து அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 2, 3 திட்டங்கள் அங்கே செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. அதிலே சுயநிதித் திட்டத்தின் மூலமாக நிலங்கள் விற்கப்பட்டிருக்கின்றன. அடுக்குமாடிக் குடியிருப்புகள் அரசுப் பணியாளர்களுக்கு வாடகைக் குடியிருப்புகளாகக் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ 1,032 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஏற்கெனவே இருந்தன. ஆனால், அவையெல்லாம் மிகவும் சிதிலமடைந்துவிட்ட காரணத்தால் 594 அடுக்குமாடிக் குடியிருப்புகள் இடிக்கப்பட்டுவிட்டன. மீதமிருக்கிற 438 அடுக்குமாடிக் குடியிருப்புகளும்கூட இடிக்கப்படுகிற நிலையிலேதான் இருக்கின்றன. எனவே, எல்லாவற்றையும் இடித்துவிட்டு புதிதாக அங்கே கட்டடம் கட்டுவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அவை கட்டப்படுகிறபோது அங்கே தேவையான வீடுகள் அரசுப் பணியாளர்களுக்குக் கிடைக்கும்; கூடுதலாகக் கிடைப்பதற்குக்கூட வாய்ப்பு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள்.

2023 அக்டோபர் 10]

திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன இடம் என்பது மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திலுள்ள திருவாடனை தொகுதிக்குட்பட்ட பகுதி. நான் கோரிக்கை வைப்பது—இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட 25–வது வார்டிலே வீட்டு வசதித் துறையின் காலியிடங்கள் இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து அந்த இடத்தில் புதியதாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இராமேஸ்வரம் பகுதியானது தற்போது வளர்ந்து வரக்கூடிய ஒரு பகுதியாக இருக்கின்றது. இராமநாதபுரத்திலிருந்து சுமார் 60 கிலோ மீட்டர் இராமேஸ்வரத்திற்கு இடைப்பட்ட இடமாக இருந்தாலும் அங்கும் பல்வேறு அரசுத் துறையைச் சார்ந்த அலுவலர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், துறையில் காலியிடங்கள் இருக்கின்றன. அங்கும் ஓர் அடுக்குமாடிக் கட்டடம் தேவைப்படுகிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே அதையும் ஒரு கோரிக்கையாக வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–10

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமாக எங்கெங்கே இடமிருக்கிறதோ, அங்கெல்லாம் தேவைக்கேற்ப கட்டுவதற்கான நடவடிக்கை கண்டிப்பாக எடுக்கப்படும். அரசுப் பணியாளர்களுக்கு வாடகைக்குக் கொடுப்பதற்காக எடுக்கிறபோது, அங்கு எவ்வளவு பணியாளர்கள் இருக்கிறார்கள், அவர்களிடத்தில் என்ன demand இருக்கிறது என்பதை முதலில் பார்த்து, அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கலாம். அதேபோல, பிற திட்டங்களுக்கு, மக்களிடத்தில் விசாரித்து, அதற்குப் பின்னர்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். காரணம், இப்படி கட்டப்பட்ட பல கட்டடங்கள் விற்கப்படாமல், அப்படியே பழுதடைந்து இடிக்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. உதாரணமாக, உடுமலைப்பேட்டையில் 101 வீடுகளைத் தனித்

தனியாகக் கட்டியிருக்கிறார்கள். அந்த 101 வீடுகளும் விற்கவில்லை. இன்றைக்கு அவற்றை முழுவதுமாக இடிக்கவேண்டிய நிலை உள்ளது. எனவே, இதை முழுமையாக ஆய்வுசெய்து, அங்கே உள்ள தேவைக்கேற்ப வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் கண்டிப்பாக எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.*

திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், நன்னிலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, நன்னிலம் பேரூராட்சிப் பகுதியில் சர்க்கரைகுளம் பகுதியிலிருந்து குடியிருப்புகள் அகற்றப்பட்டு, வேறு இடத்திற்குச் செல்லக்கூடிய சூழ்நிலை உள்ளது; அப்பகுதியில் இடமும் இருக்கிறது. அந்த இடத்தில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அவர்களுக்கு புதிய வீடுகள் கட்டித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதனை மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த details தற்போது கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதன் அடிப்படையில், அது பரிசீலிக்கப்படும். அரசுப் பணியாளர்களுக்காகக் கேட்கிறீர்களா அல்லது பொதுவாகக் கேட்கிறீர்களா என்று தெரியவில்லை. எனவே, அங்கு இடம் இருந்தால், அந்தத் திட்டத்தை ஆய்வு செய்து, எதற்குப் பயன்படுத்த முடியுமோ, அதற்குப் பயன்படுத்தும் வகையில் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி அவர்கள்.*

திரு. க. கணபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய இடத்தில் பலதரப்பட்ட மக்கள் பல ஆண்டுகளாகக் குடியிருந்து வருகிறார்கள். அதற்கு* NOC *வேண்டுமென்று பலமுறை நாங்கள் முறையிட்டிருக்கிறோம். மாண்புமிகு*

2023 அக்டோபர் 10]

அமைச்சர் அவர்கள் அதற்காக ஒரு குழு அமைத்து, அதற்கான பணிகளைத் துவங்கவுள்ளோம் என்று கடந்த கூட்டத்தொடரில் உறுதி அளித்திருந்தார்கள். அதேபோல, சென்னையில் 16 இடங்களில், ஆங்காங்கே புகார் மனுக்கள் பெறும் பெட்டிகள் வைக்கப்பட்டு, அதிலே போட்டிருக்கிறார்கள். அவற்றின்மூலம் பொதுமக்களிடமிருந்து பல ஆயிரம் மனுக்கள் பெறப்பட்டுள்ளன; அது எந்த நிலையில் இருக்கிறது? சோழிங்கநல்லூர் உள்ளிட்ட சென்னை மாநகராட்சியில் உள்ள அனைத்து இடங்களிலும் இதுபோன்ற நிலை உள்ளது. பல ஆயிரம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பல ஆண்டுகளாக இந்த இடங்களிலே குடியிருந்தும்கூட பட்டா பெறமுடியாத நிலை, வீடுகட்ட முடியாத நிலை உள்ளது. அந்த வீடு document செய்யப்பட்டிருந்தாலும்கூட, அதை இடித்துவிட்டு கட்டும் நிலைகூட இல்லை. என்ன காரணம் என்றால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி, கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. க. கணபதி: NOC இல்லாமல் approval கிடைப்பதில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான உரிய நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைய பிரச்சினைகள் இதுபோல வந்தன. 30 ஆண்டுகளுக்கு முன்னால், வீட்டு வசதி வாரியத்தால் ஒரு notice வழங்கப்பட்டுள்ளது. அதற்குப் பின்னால், வீட்டு வசதி வாரியத்தால் மேல்நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. ஆனால், அந்த இடத்தை விற்பதற்கு அவர்கள் உரிமை இழக்கிறார்கள். ஆனால், வீடுகள் அவர்களின் கைகளில்தான் இருக்கின்றன. சில பிரச்சினைகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. எனவே, அந்த நிலச் சொந்தக்காரர்களுக்குப் பலவிதமான பிரச்சினைகள் ஏற்பட்டன; வீட்டு வசதி வாரியத்திற்கும் பல பிரச்சினைகள் ஏற்பட்டன. இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து, ஒரே நடவடிக்கையாக எடுப்பதற்கு எந்த முயற்சியும் இல்லாமல் இருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இதுபோன்ற

ஒரு மனு வந்தபோது, அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும், அவை எல்லாவற்றையும் ஒன்றாக இணைத்து, ஒரு நியாயமான நடவடிக்கையை எடுங்கள் என்று எங்களுக்குச் சொன்னார்கள். அதற்குப் பிறகுதான், மாநிலம் முழுவதும், 16 இடங்களில் புகார் பெட்டிகள் வைக்கப்பட்டன. அந்தப் புகார் பெட்டிகளின் வாயிலாக, 6,000 மனுக்கள் பெறப்பட்டு, பிரித்து வைக்கப்பட்டுள்ளன. அதற்காகத் தனியே ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அக்குழு, அந்த மனுக்களை எடுத்து ஆய்வு செய்து, அவற்றின்மீது உரிய நியாயமான நடவடிக்கை, அதாவது வீட்டு வசதி வாரியத்திற்கும் பிரச்சினை ஏற்படாமல், நிலச் சொந்தக்காரரர்களுக்கும் உரிமை விட்டுப்போகாமல் பார்த்துக்கொள்ளும் வகையில் நடவடிக்கை எடுத்து வருகிறது. எனவே, மிக விரைவில், அது குறித்து முழுமையான தீர்வு காணப்படும்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 213, மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல், மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

213—

விடுதி

***12080—திருமதி கு. மரகதம் குமரவேல்:**

மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதியில் பணிபுரியும் மகளிருக்கான விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள மதுராந்தகம் தொகுதியின் மக்கள்தொகை 2,75,953 ஆகும்.